# பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு

## 2024 ஆம் ஆண்டிற்கான வழங்குனர்கள் / ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல்

1. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களுக்காக 2024 ஆம் ஆண்டிற்கான வழங்குனர் / ஒப்பந்ததாராக பதிவு செய்துக்கொள்வதற்காக கட்டுமானம், பழுதுபார்ப்பு, பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான வெளிநாட்டு உற்பத்தியாளர்கள், அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள், உள்ளூர் உற்பத்தியாளர்கள், உள்ளூர் வழங்குனர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் ஆலோசனை நிறுவனங்கள் சார்பாக பொது பாதுகாப்பு அமைச்சகத்தின் செயலாளரினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

   - பொது பாதுகாப்பு அமைச்சகம்
   - இலங்கை பொலிஸ் (பொலிஸ் சிறப்பு அதிரடிப்படை உட்பட)
   - குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்
   - ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்
   - தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை
   - அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம்

2. **விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளும் முறை.**

   அ. விண்ணப்பங்களை **2023.11.23** முதல் **2023.12.22** ஆம் திகதி வரை பின்வரும் இணையதளங்களில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். **www.pubsec.gov.lk / www.police.lk / www.drp.gov.lk / www.immigration.gov.lk/ www.nddcb.gov.lk / www.ngosecretraiat.gov.lk**

   ஆ. பதிவு செய்வதற்கான விண்ணப்ப தொகுப்பு பின்வரும் பகுதிகளைக் கொண்டுள்ளது.

   - பிரதான விண்ணப்பம்.
   - வெளிநாட்டு வழங்கல் நிறுவனத்தின் விண்ணப்பப்படிவம்
   - அறிவுறுத்தல்கள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய படிவம்.
   - விபரங்களின் பட்டியல்.

3. **வகுதி ஒன்றிற்காக அறவிடப்படும் கட்டணம்**

   அ. உள்ளூர் வழங்குனர்களிடமிருந்து வகுதி ஒன்றிற்காக அறவிடப்படும் கட்டணம் **இலங்கை ரூபாய் ஆயிரத்து எண்ணூறு (ரூபாய்.1,800.00)** ஆகும்.

   ஆ. வெளிநாட்டு வழங்குனர்களிடமிருந்து ஒரு தொகுதிக்காக வசூலிக்கப்படும் கட்டணம் **10 அ.மெ.டொலர்.**

   இ. பொதுப் பாதுகாப்பு அமைச்சின் அலுவலகத்தில் வகுதிக் கட்டணம் பணமாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது, 2024 ஆம் ஆண்டிற்கான வழங்குனர்களைப் பதிவுசெய்வதற்கான வகுதிக் கட்டணத்தை **செயலாளர், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, இலங்கை வங்கி, பத்தரமுல்ல கிளையில் 7040131 எனும் வங்கிக் கணக்கிலக்கத்தில் இலங்கை வங்கியின் எந்தக் கிளையிலும் வைப்புச் செய்யலாம்.**

   ஈ. வெளிநாட்டு வழங்குனர்களுக்கான பின்வரும் Swift code கட்டண முறைகளைப் பயன்படுத்தி **இலங்கை வங்கிக்கு** பணம் செலுத்த வேண்டும்.

   | | |
   |---|---|
   | **Swift இலக்கம்** | - **BCEYLKLX** |
   | **வங்கி இலக்கம்** | - **7010** |
   | **கிளை இலக்கம்** | - **679** |
   | **கணக்கு இலக்கம்** | - **7040131** |

   உ. வகுதிக் கட்டணத்தைச் செலுத்தும் போது விண்ணப்பப் படிவத்துடன் பணம் வைப்புச் சீட்டினை இணைத்து சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும்.

   ஊ. உள்ளூர் வழங்குனர்கள் மற்றும் வெளிநாட்டு வழங்குனர்கள் **2023.11.23** முதல் **2023.12.22** வரையிலான காலப்பகுதியில் வகுதிக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும் மேலும் **2023.12.22** ஆம் திகதிக்குப் பிறகு செலுத்தப்படும் வகுதிக் கட்டணங்களுக்குப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சினால் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

4. பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்கள் / ஒப்பந்தக்காரர்களின் விலைமனுக்கோரல் பொதுவான நடைமுறையாகும். மேலும் போட்டிமுறையிலான விலைமனுக்கோரல்களைப் பெறுவதற்கு வெளிவாரி வழங்குனர்கள் / ஒப்பந்தக்காரர்களின் மனுக்களை கோருவதற்கான உரிமை அமைச்சிற்கு உண்டு.

5. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், உரிய ஆவணங்களுடன் **2023.12.22** ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் தலைமைக் கணக்காளருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் உள்ளடங்கிய உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"2024 ஆம் ஆண்டிற்கான உள்நாட்டு / வெளிநாட்டு வழங்குனர்களை பதிவு செய்தல்"** எனக் குறிப்பிட வேண்டும்.

   தலைமைக் கணக்காளர்,<br>
   பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு,<br>
   17 ஆம் மாடி, சுஹுருபாய,<br>
   பத்தரமுல்ல,<br>
   இலங்கை.

6. 2024 ஆம் ஆண்டிற்கான வழங்குனர்களை பதிவு செய்வது தொடர்பாக இறுதி முடிவுகளை எடுக்கும் உரிமை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு உண்டு. மேலதிக விபரங்களை கணக்காளர் - **011 2887328** மூலமாக பெற்றுக்கொள்ளலாம்.

**செயலாளர்,**

**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு,**

**14 ஆம் மாடி, சுஹுருபாய, பத்தரமுல்ல, இலங்கை.**

SELACINE